# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 101/மா/2023**

**நாள் : 22/05/2023**

திரு. R. காதர்,
வேலூர். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர், வேலூர் மாநகராட்சி,
வேலூர். – எதிர்மனுதாரர்

வேலூர் மாநகராட்சி, சின்ன அல்லாபுரம் மெயின்ரோடு, இக்ராபள்ளி அருகில் கதவு எண்.18A–ல் வசிக்கும் திரு. R. காதர் அவர்களின் 13.04.2023 நாளிட்ட மனு 21.04.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 101/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

வேலூர் மாநகராட்சி, சின்ன அல்லாபுரம் மெயின்ரோடு, இக்ராபள்ளி அருகில் கதவு எண்.18/A–ல் வசிக்கும் திரு. R. காதர் அவர்கள் தனது 13.04.2023 நாளிட்ட மனுவில் மற்றவற்றுக்கிடையில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

" வேலூர் மாநகராட்சியில் மண்டலம் –04ல் வார்டு 55ல் எடத்தெருவில் பாதாள சாக்கடைக்கு குழி தோண்டியபோது borewell ஆழ்துளை கிணறு உடைந்து அதில் உள் நீர்மூழ்கி மோட்டார் மற்றும் கயிறு, குழாய் அறுந்து ஆழ்துளை கிணறு பள்ளத்தில் சென்று விட்டது. இதனால் கிணறு பழுது அடைந்து விட்டது. 16 மாதம் ஆகியும் சரி செய்யப்படவில்லை. இதனால் அங்கு உள்ள

பொதுமக்கள் தண்ணீருக்காக மிகவும் கஷ்டப்பட்டு வருகின்றனர். தகவல் உரிமை சட்டத்தி 19.03.2021 மனு செய்து தகவல் கேட்டால் தேர்தல் முடிந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தகவல் தந்து விட்டு ஒரு வருடம் ஆகியும் நடவடிக்கை எடுக்கவில்லை.

ஆழ்துளை கிணறு உடைந்ததற்கு காரணம்:

பாதாள சாக்கடைக்கு குழி தோண்டியபோது வேலூர் மாநகராட்சியின் அதிகாரிகள் அங்கு இருப்பதில்லை. ஆதலால் குழாய் உடைந்து ஆழ்துளை கிணறு பழுதுபட்டுள்ளது. யாரும் நடவடிக்கை எடுப்பதில்லை.

கோரிக்கை:

1. போர்க்கால அடிப்படையில் borewell ஆழ்துளை கிணறு அமைய வேண்டும்.
2. கடமை தவறிய அனைத்து அதிகாரிகள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
3. borewell ஆழ்துளை கிணறு அமைத்த நிதியில் ஊழல் செய்யப்பட்டதா என விசாரணை செய்ய கோரிக்கை.

மக்களின் வரி பணத்தை சம்பளமாக பெற்றுக்கொண்டு கடமை தவறிய அனைத்து அதிகாரிகள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஊழல் லஞ்சத்தை ஒழித்து நம் நாட்டை காப்பாற்றுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, இம்முறைமன்ற நடுவ 02.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் வேலூர் மாநகராட்சியின் ஆணையரிடம் கோரப்பட்டது.**

**3. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 09.05.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 02.05.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**4. மனுதாரர் 09.05.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:**

" வேலூர் மாநகராட்சி மண்டலம்–04 வார்டு –55ல் உள்ள எடத்தெருவில் பாதாள சாக்கடைக்கு குழி தோண்டியபோது அங்கிருந்த ஆழ்துளை கிணறு பழுதுபட்டும், மோட்டார் மற்றும் பைப் ஆகியவை உடைந்துள்ளது. இதனால் அப்பகுதியில் தண்ணீர் விநியோகம் சீராக நடைபெறவில்லை. மேற்கண்ட பழுது குறித்து மாநகராட்சி அலுவலர்களிடமும் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகியோரிடம் புகார் மனு அளிக்கப்பட்டது. ஆனால் 16 மாத காலம் ஆகியும் இன்னும் மேற்கண்ட பழுதுகள் நீக்கப்படவில்லை.எனவே மேற்கண்ட பகுதியில் உள்ள ஆழ்துளை கிணறு மற்றும் போர்வெல் ஆகியவற்றை விரைவில் பழுது நீக்கம் செய்து எங்கள் பகுதியில் சீரான நீர் விநியோகம் நடைபெற ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும் எனது 13.04.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்து கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5. வேலூர் மாநகராட்சியின் உதவி பொறியாளர் 09.05.023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்:

" வேலூர் மாநகராட்சி மண்டலம் 04 வார்டு 55–ல் உள்ள எடத்தெருவில் பாதாள சாக்கடை அமைக்கும்பணி நடைபெற்று வந்தது. மேற்கண்ட பணிகள் நடைபெறும்போது, அங்குள்ள ஆழ்துளை கிணறுகள் மற்றும் போர்வெல் ஆகியவற்றில் உடைப்பு ஏற்பட்டது. மேற்கண்ட பாதாள சாக்கடை திட்டம் முடிவடைந்தவுடன் மனுதாரர் குறிப்பிட்டுள்ள பழுதடைந்த ஆழ்துளை கிணறுகள் மற்றும் போர்வெல் ஆகியவை பழுதுநீக்கம் செய்யப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. வேலூர் மாநகராட்சியின் இளநிலைப்பொறியாளர் 09.05.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்:

" வேலூர் மாநகராட்சியில் மண்டலம் –02ல் ஜனவரி 2023 முதல் இளநிலை பொறியாளராகப் பணியாற்றி வருகிறேன். வேலூர் மாநகராட்சி மண்டலம் –04ல் பகுதிகளில் பாதாள சாக்கடைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட பாதாள சாக்கடைப்பணிகளை மேற்பார்யிடுவதற்கென்று தனியாக உதவிப்பொறியாளர் (பாதாள சாக்கடை) ஒருவரை மாநகராட்சி நியமித்துள்ளது. மேற்கண்ட மண்டலம்–04 உதவிப்பொறியாளர் திரு. செல்வராஜ் என்பவர் இன்றைய தினம் TUFIDCO நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் Apprisal பணிக்காக நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் கலந்து கொள்வதால் அவரால் இம்முறைமன்றத்தில் ஆஜராக இயலாதநிலையில், வேறொரு மண்டலத்திற்கு பணி மாற்றம் செய்யப்பட்ட நான் இம்முறைமன்றத்தில் இன்று ஆஜரானேன் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. இந்நேர்வில் மனுதாரரை 11.05.2023 அன்று நடைபெறும் மறுவிசாரணைக்கு நேரடியாக ஆஜராகும்படி தொலைபேசிமூலம் அழைப்பு விடுக்கப்பட்டது. இம்முறைமன்ற நடுவ 09.05.2023 நாளிட்ட அழைப்பாணை மூலம் எதிர்மனுதாரரை 11.05.2023 அன்று நடைபெறும் மறுவிசாரணைக்கு ஆஜராகும்படி அழைப்பு அனுப்பப்பட்டது.

8. வேலூர் மாநகராட்சியின் உதவி பொறியாளர் 11.05.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" மனுதாரரின் மனுவின் மீது 09.05.2023 அன்று இம்முறைமன்றத்தில் நடைபெறும் விசாரணை குறித்து சரியான தகவல் என்னால் பெறப்படாததால் அன்றைய தினம் இம்முறைமன்றத்தில் என்னால் ஆஜராக இயலவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள வேலூர் மாநகராட்சி மண்டலம்–04 வார்டு –55ல் உள்ள எடத்தெருவில், பாதாள சாக்கடைக்கு பள்ளம் தோண்டியபோது அங்குள்ள ஆழ்துளை கிணறு உடைந்து, மோட்டார் மற்றும் பைப் உடைந்து விட்டது. மேற்கண்ட பழுது இன்னும் 1 வார காலத்தில் மாநகராட்சியின் பாதாள சாக்கடை திட்டத்தை மேற்கொண்ட

ஒப்பந்ததாரர் மூலம் சரி செய்யப்படும் எனவும், அவ்வாறு சரிசெய்ய இயலாத நிலையில், மேற்கண்ட பழுதடைந்த ஆழ்துளை கிணறு மோட்டார் மற்றும் பைப் ஆகியவை புதியதாக அமைத்திட வேண்டி மாநகராட்சி மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அவை ஒரு மாத காலத்தில் முடிக்கப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

9. மனுதாரர் தனது மனுவில் தங்கள் பகுதியில் ஆழ்துளை கிணறு பழுதுபட்டு 16 மாதங்கள் கடந்தும் சரி செய்யப்படாததால் குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டதால் பொதுமக்கள் மிகவும் கஷ்டப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

வேலூர் மாநகராட்சி உதவி பொறியாளரின் வாக்குமூலத்தில் இக்குறைபாடு இன்னும் ஒரு வார காலத்தில் மாநகராட்சியின் பாதாள சாக்கடை திட்டத்தை மேற்கொண்ட ஒப்பந்தாரர்மூலமே சரி செய்யப்படும் எனவும் அவ்வாறு சரி செய்ய இயலாத நிலையில், மேற்கண்ட பழுதடைந்த ஆழ்துளை கிணறு மோட்டார் மற்றும் பைப் ஆகியவை புதியதாக அமைத்திட வேண்டி மாநகராட்சி மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு அவை ஒரு மாதகாலத்தில் முடிக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

10. இந்நேர்வில், மனுதாரரின் மனு, வாக்குமூலம், வேலூர் மாநகராட்சி அலுவலர்களின் வாக்குமூலம் ஆகியவற்றின் அடிப்படையிலும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் 2014ல் கீழ்குறிப்பிட்டுள்ள பிரிவின்படி

12. (1) The Ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manner, namely:-

(d) Order other necessary remedial measures considering the facts and circumstances of the case: அடிப்படையிலும் இந்நிகழ்வில் வேலூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பின்வருமாறு ஆணையிடுகிறது:

(i) 09.05.2023 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜரான இரு வேலூர் மாநகராட்சி அலுவலர்கள் சரியான முறையில் இந்நிகழ்வு குறித்து விளக்கம் அளிக்கவில்லை. சம்மந்தமில்லாத அலுவலர்களை அனுப்பியது வன்மையாக கண்டிக்கத்தக்கது. மாநகராட்சி நிதி விரையமாக்கப்படுகிறது. எனவே அந்த இரு அலுவலருக்கும் தினப்படி மற்றும் பயணப்படி வழங்க வேண்டிய அவசியமில்லை.

(ii) மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஆழ்துளை கிணறு சரி செய்ய ஏற்கனவே பாதாள சாக்கடை திட்டத்தை மேற்கொண்ட ஒப்பந்ததாரர் மூலம் ஒரு வார காலத்திற்குள் சரி செய்யப்பட வேண்டும்.

(iii) மேற்படி ஒரு வார காலத்திற்குள் சரி செய்ய முடியாத பட்சத்தில் மாநகராட்சி அலுவலர் வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு பழுதடைந்த ஆழ்துளை கிணறு மோட்டார் மற்றும் குழாய்

ஆகியவை புதியதாக அமைத்திட வேண்டி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அவை ஒரு மாதகாலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் என இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

The Vellore Corporation Commissioner defaulted in not deputing the Engineer responsible for drinking water supply provision and maintenance on the first occasion that betrays his indifferent attitude towards this Forum. This is censured. The lack of remedial action on the part of the Zonal Officials and Corporation in repairing the damages caused to the bore well units during the UGDS implementation for more than 1 year is condemned by this Forum and the DMA is directed to initiate disciplinary action against the delinquents who are bent on bringing bad name to the Vellore Corporation as well as Local Administration. This kind of negative conduct is contrary to the instructions of the Hon'ble Chief Minister who lays ample stress on redressing the grievances of the citizens by various departments concerned in prompt time and attention. Hence the delinquents in this case deserve to be dealt with sternly.

The Corporation Commissioner is directed to set the Bore well damages within the stipulated time of one month as undertaken by the Assistant Engineer who appeared before the Forum on 11.05.2023 as he failed to appear on the previous day of hearing due to the communication gap between the Commissioner's office and the field Engineer's office.

2023–ஆம் ஆண்டு மே திங்கள் 22–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. R.காதர்,
   18/A, சின்ன அல்லாபுரம் மெயின்ரோடு,
   இக்ராபள்ளி அருகில்,
   வேலூர் – 632 001.
2. ஆணையர்,
   வேலூர் மாநகராட்சி.
3. அரசு கூடுதல் தலைமைச்செயலர்,
   நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை,
   தலைமைச்செயலகம்,
   புனித ஜார்ஜ் கோட்டை,
   சென்னை – 600 009.

4. நகராட்சி நிர்வாக இயக்குநர்
   நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை– 600 028.

5. இணைஇயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை– 600 028.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

உதவி பதிவாளர்